## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.124/2016

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 16.12.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாந்தி | ஜாதி | : | |
| க/பெயர் | : | கண்ணன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**பி.சா.1 முன்னிலை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கை தாக்கல் செய்துள்ள வசந்தாவும், நானும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வாதிகள் குடும்பத்தில் யார், யார் இருக்கிறார்கள் என்பது பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதிக்கு 3 நபர்கள் வாரிசுதாரர்கள் ஆவார். அவர்கள் பெயர் தெரியுமா என்றால் 2 ஆண்பிள்ளைகள், 1 பெண்பிள்ளை இருக்கிறார்கள். தாவா சொத்துக்கள் வசந்தாவிற்கு சொந்தமானது என்பதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் வசந்தாவிற்கு சொந்தமான சொத்து தான்.

வசந்தாவிற்கு சொந்தமான சொத்துக்களை பொறுத்து வசந்தா ஆவணம் எதுவும் ஏற்படுத்திக்கொடுத்துள்ளரா என்றால் இல்லை. அவரது மகனுக்கு வசந்தா கொடுத்த சொத்தை தான் அவரது மகன் என் கணவருக்கு எழுதிக்கொடுத்தார். தாவா சொத்தை குறித்து எனக்கு முழு விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு தெரியும். தமிழரசன் என்பவர் தான் என் கணவருக்கு ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்தார். தாவா சொத்தின் புல எண் குறித்து தெரியுமா என்றால் சரியாக ஞாபகமில்லை. என் கணவருக்கு தான் தெரியும். மேற்கண்ட விவரங்களை குறித்து என் கணவரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.12.16 18:30:16 +0530

District Munsif

Mannargudi.